අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## வினாத்தாள் I, II & III



முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## கல்வி அமைச்சு

| 22 | T | I, II |
|---|---|---|

### தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

### க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்திலுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

* **தடித்த எழுத்தில்** அமைந்த சொல்லுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. "அரவநெடுங்கடல் ஆடை அவனியெலாம்" இங்கு **அரவம்** என்பது
   (1) பாம்பு (2) சங்கு (3) ஆழி (4) ஒலி
2. "அண்ணல் யானை அணிதேர் புரவி" இதில் **புரவி** என்பது குறிக்கும் சொல்
   (1) களிறு (2) குருவி (3) குதிரை (4) தேர்
3. "எட்டுணையானும் இரவாது தான் ஈதல்" இங்கு **ஈதல்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) ஏற்றல் (2) கொடுத்தல் (3) வேண்டுதல் (4) தொலைத்தல்
4. "நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலமளித்தது" இதில் **அனுகூலம்** என்பதன் எதிர்க்கருத்து
   (1) நன்மை (2) பிரதிகூலம் (3) சாதகம் (4) வாய்ப்பு
5. "கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு" என்பதில் **குறிஞ்சி** என்பது
   (1) ஒருவகைத் தாவரம் (2) ஒருவகை நிலம்
   (3) ஒருவகை ஒழுக்கம் (4) ஒருவகைத் திணை

* பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

6. தொடர்பற்ற சொற்களின் இணைவு
   (1) அலப்பும் - குரங்கு (2) எக்காளமிடும் - எருமை
   (3) கதறும் - பசு (4) உறுமும் - சிங்கம்
7. பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி
   (1) அமர், சமர், யுத்தம் (2) சோரி, புனல், குருதி
   (3) பழனம், கழனி, வயல் (4) அடவி, ஆரணியம், கானகம்
8. பொருளால் வேறுபடுஞ்சொல்
   (1) வேழம் (2) சிந்துரம் (3) குரகதம் (4)கரி

9. UNICODE(யுனிக்கோட்) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) ஒருங்குறி (2) படிமம் (3) குறியாக்கம் (4) முறைமை

10. இளமை குறித்த பறழ் எனும் மரபுப் பெயருக்குப் பொருத்தமற்றது
(1) நாய் (2) பன்றி (3) புலி (4) மான்

11. விதை, கொட்டை எனும் வித்துக்களின் மரபுப் பெயரோடு பொருந்தி வராதது
(1) பப்பாசி (2) வேம்பு (3) புளி (4) பாகல்

12. "இரண்டு பேருடைய வாயையும் மாறிமாறிப் பார்த்தேன்" இங்கு மாறிமாறி என்பது
(1) அடுக்குத்தொடர் (2) இணைமொழித்தொடர்
(3) சிலேடைத்தொடர் (4) அடுக்கிடுக்குத்தொடர்

13. ஒருவரது புகழ் எங்கும் பரவியிருந்தது என்பதைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
(1) மாடமாளிகை கூடகோபுரம் (2) இகபர இன்பம்
(3) இடம் பொருள் ஏவல் (4) பட்டிதொட்டியெங்கும்

14. "அவன் கதையை மேலெழுந்தவாரியாகப் படித்தான்." - மேலெழுந்தவாரியாக என்பதை வலியுறுத்தத்தக்க உவமைத் தொடர்
(1) கல்மேல் எழுத்துப் போல (2) நுனிப்புல் மேய்ந்தது போல
(3) நீர்மேல் எழுத்துப் போல (4) பசுமரத்தாணி அறைந்தாற் போல

15. "இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை" என்ற பழமொழியின் கருத்து
(1) பொறுமை காத்துக் கெட்டவர் எங்குமில்லை
(2) ஈகை செய்து கெட்டவர் எங்குமில்லை
(3) சத்தியம் உரைத்துக் கெட்டவர் எங்குமில்லை
(4) தேட்டம் செய்து கெட்டவர் எங்குமில்லை

16. "மனங்கொண்டது மாளிகை" என்பதற்கு இணையான பழமொழி
(1) வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
(2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
(3) போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
(4) உப்பிட்டவரை உள்ளளவும் நினை

17. "சிறுவன் எலும்புந்தோலுமாகக் காட்சியளித்தான்" - எலும்புந்தோலும் என்பது
(1) சிலேடைத்தொடர் (2) அடுக்குத்தொடர்
(3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இணைமொழித்தொடர்

18. "புதிய வரிக் கொள்கைகள் ஏழைகளின் வயிற்றிலடித்தன" - வயிற்றிலடித்தல் எனும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
(1) வயிற்றில் குத்துதல் (2) வயிறு வலித்தல்
(3) வயிறு கிழிதல் (4) சீவனத்தைக் கெடுத்தல்

19. அ) பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது
ஆ) அரசு நிலைகுலைந்தது
இவ்விரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருந்தியமையாத இணைப்பிடைச் சொல்
(1) இருப்பினும் (2) அதனால் (3) என்பதால் (4) ஆதலால்

20. பின்வருவனவற்றுள் பெயரிடை நிலையாகவும், வினையிடை நிலையாகவும் வருவது
(1) ப் (2) வ் (3) ஞ் (4) ட்

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

21. ககரம் ஆங்கில எழுத்து "H" என்பதற்கு நிகராக ஒலிப்பது
(1) கலைஞன் (2) தாகம் (3) கம்மல் (4) கப்பல்

22. பகுபத உறுப்புக்களில் காலங்காட்டி நிற்பதாய் அமையாதது
(1) சாரியை (2) பகுதி (3) இடைநிலை (4) விகுதி

23. பின்வருவனவற்றில் வினைத்தொகையாகவும், உவமைத்தொகையாகவும் அமைவது
(1) கயல்விழி (2) தேன்மொழி (3) பிறைவிழி (4) மலர்விழி

24. பின்வருவனவற்றுள் ஆக்க வினையடை
(1) அழகான (2) அருகே (3) இனிமையாக (4) இனிமையான

25. தோன்றல் விகாரம் இடம்பெற்ற சொல்
(1) பாலாடை (2) பனையோலை (3) கற்குகை (4) வட்டமேசை

26. "நான் கண்டிக்குப் போகிறேன்" என்பதிலுள்ள "கு" உருபு உணர்த்துவது
(1) ஓர் இடம் நோக்கி நகர்தல் (2) காலக்குறிப்பு
(3) எல்லைப்பொருள் (4) அனுபவப்பேறு

27. பின்வருவனவற்றில் பொது வினை
(1) குடி (2) உண் (3) ஆடு (4) எரி

28. "அவள் சுதி சுத்தமாகப் பாடினாள்" இதில் சுதி என்பது
(1) மரூஉ (2) குழூஉக்குறி (3) மங்கலம் (4) இடக்கரடக்கல்

- **பொருத்தமான** உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

29.
(1) பண்புத்தொகை - கருங்குழல், வட்டமேசை, மாணவர்மேசை
(2) உம்மைத்தொகை - அறிவழகு, சாரைப்பாம்பு, இரவுபகல்
(3) வினைத்தொகை - ஆடுகதிர், தாழ்குழல், சுடுசோறு
(4) உவமைத்தொகை - மதிமுகம், வாட்கண், மலர்க்கிளை

30.
(1) ஏவல் வினை - எழுதுங்கள், படியுங்கள், சாப்பிட்டான்
(2) தன் வினை - கண்டான், படித்தாள், உண்டான்
(3) பிறவினை - ஊட்டினாள், கற்பித்தார், உருண்டான்
(4) செய்வினை - ஓடினாள், கடியுண்டான், வெட்டினான்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

31. இன்று ஜனாதிபதி தலைமையிற் கூடும் அமைச்சரவை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாக ....................
(1) ஆராய்வார்கள் (2) ஆராய்ந்தார்கள் (3) ஆராயவுள்ளது (4) ஆராய்ந்தது

32. .................... என்பது நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியரல்லாத வேறொருவரால் எழுதப்படுவதாகும்.
(1) நூன்முகம் (2) முன்னுரை (3) அணிந்துரை (4) பொருளடக்கம்

33. கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் ஆகிய .................... சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாகத் தொழிற்பட வேண்டும்.
(1) கலைஞர்கள் (2) இலக்கியவாதிகள் (3) படைப்பாளிகள் (4) அறிஞர்கள்

34. காணாமற்போன தன் பிள்ளையைக் கண்டுபிடித்துத் தருமாறு அப்பிள்ளையின் தந்தையால் நீதிமன்றத்தில் .................... தாக்கல் செய்யப்பட்டது.
(1) பிடியாணை (2) பிரேரணை (3) அழைப்பாணை (4) ஆட்கொணர்வு மனு

35. நாம் ஒரு வேலையைச் சரிவரச் செய்வதற்கு பொருத்தமான .................... நம்மிடம் இருக்க வேண்டும்.
(1) முன்னேற்பாடு (2) நிலைப்பாடு (3) கள ஆய்வு (4) அறிவுறுத்தல்

36. போதைவஸ்துப் பாவனை அதிகரிப்பால் நாடு எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக வருங்காலத்தில் .................... நடவடிக்கைகள் தொடர்பாகத் தீவிரமாக ஆராய வேண்டும்.
(1) மேற்கொண்ட (2) மேற்கொள்கின்ற
(3) மேற்கொள்ளப்படவேண்டிய (4) நிறைவேற்றிய

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவசக்தியாம்
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ!

37. ஆணும் பெண்ணும் சமமெனக்கொள்ளப்படுவதால் நிகழ்வது யாது என்கிறார் கவிஞர்
(1) உலகம் அறிவில் மேலோங்கும்
(2) பெண் சுதந்திரம் பெறுவாள்
(3) பெண் ஞானம் பெறுவாள்
(4) பெண் நற்குடிப் பண்பைப் பெறுவாள்

38. பெண்ணிற்கு வேண்டத்தகாத குணம்
(1) வீரம் (2) நல்லறம் (3) ஞானம் (4) நாணம்

39. இப்பாடலில் கவிஞர் பெண்ணை எவ்வாறு நோக்குகிறார்
(1) குலப்பெண்ணாக (2) தெய்வமாக
(3) அறிவுடையவளாக (4) அறம்புரிபவளாக

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிவுசெய்க.
அ. ஆகவே, அறிக்கையெழுதும் விடயத்தில் மாணவர்கள் கவனஞ்செலுத்த வேண்டும்.
ஆ. அவ்வாறன்றி பிற்கால வாழ்கையிலும் அறிக்கையெழுதும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.
இ. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதும் விடயங்களுள்அறிக்கை எழுதுவதுமொன்றாகும்.
ஈ. அவ்வாறு செய்தால் அறிக்கையைச் சிறப்பான முறையில் மாணவர்களால் எழுத முடியும்.
உ. பாடசாலை வாழ்கையில் மாணவர்களுக்கு அறிக்கை எழுதும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.
(1) இ அ ஈ உ ஆ
(2) இ ஈ உ ஆ அ
(3) இ உ ஆ அ ஈ
(4) இ அ ஈ ஆ உ

**

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

கல்வி அமைச்சு

| 22 | T | I, II |
|---|---|---|

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I, II

## தமிழ் மொழியும் இலக்கியமும் - II

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) "முழங்கு நிரைப் புனலருவி கழங்கெனமுத்தாடும்" எனும் சொற்றொடரைச் சந்தி பிரித்தெழுதுக.

(ii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு, அதனை மீண்டும் எழுதுக.

கொஞ்சம் வரிசையில அப்படியே இருங்கோ ஏன் ஐயா இடையில எழும்புறீங்கள்

(iii) "நீ மரங்களை வெட்டினாய்"

மேலே தரப்பட்ட செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(iv) இன்றைக்கென்னவோ செவத்தாள் பால் கறக்க விடவில்லை.

மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக.

(v) இந்திய விடுதலைப் போராட்டம் மூட்டிய சுதந்திரத் தீ விடுதலையாகப் பரவிக் கொழுந்துவிட்டெரிந்தது.

இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பவற்றை எழுதுக.

(vi) "மடி" எனும் சொல் பெயராகவும், வினையாகவும் அமைந்துவருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(vii) இருவர் இருவாரகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்.

மேலே தரப்பட்ட வாக்கியத்தில் பொருள் மாறுபடாதவாறு நீக்கிவிடக்கூடிய சொல்லை எழுதுக.

(viii) முழங்குகின்ற அருச்சுணனது வாழ்விலே இலட்சியம் முதலிடம் பெறுகிறது.

இவ்வாக்கியத்திலுள்ள பெயரெச்சத்தை எழுதுக.

(ix) நீ கவனமாகப் படித்தால் பரீட்சையில் சித்திபெறுவாய்.

மேலே தரப்பட்ட வாக்கியத்தின் தலைமைத்தொடர், சார்புத்தொடர் என்பவற்றை எழுதுக.

(x) கடினமான போக்குடைய மாணவர்கள் மொழியின் இலக்கணத்தை உணரார்கள்.

இவ்வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை நீக்கி எழுதுக.

(02 x 10 = 20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(அ) சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டிற்கு வருவதால் நாடு பல வரப் பிரசாதங்களைப் பெற்றுக்கொள்கிறது. எனவே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுகிறது. எமது நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அம்சங்கள் பற்றியும் சுற்றுலாத் துறையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றியும் உமது கருத்துக்கள் வெளிப்படுமாறு ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ஆ) இன்று நமது நாட்டில் வீதி விபத்து என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஊடகங்களின் செய்திகளில் இவை முக்கியமான இடத்தை வகிக்கின்றன. வீதி அபிவிருத்தியின் போதாமை இதற்கு ஒரு காரணமாகும். அதேவேளை வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் வீதியொழுங்கையும், வீதி விதிகளையும் கடைப்பிடிக்காமையும் காரணமாகும். வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு **விவரணக் கட்டுரை.**

(இ) தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று மாணவரிடையே செல்லிடப்பேசி, கணினி முதலான இலத்திரனியல் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளது. மின்னஞ்சல், முகநூல், பற்றியம், வலையொளி, படவரி, புலனம் முதலியவற்றினூடாக அவர்கள் விரைவாகத் தகவல்களைப் பெறுகிறார்கள், பரப்புகிறார்கள், அறிவு பெருகுகிறது. எனினும் இவற்றால் படிப்பிற் கவனமின்மை, துஷ்பிரயோகங்கள் என்பவற்றிற்கும் வழியேற்பட்டுவிடுகிறது. இவ்வாறாக இலத்திரனியல் ஊடகங்களால் மாணவ சமூகத்திற்கு ஏற்படும் நன்மை, தீமை பற்றிய **உரையாடல்.**

(ஈ) "கண்ணன் நன்றாக உழைத்துச் சம்பாதித்தான். பணம் சேர்ந்தது எனினும் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட அதைச் செலவழிக்க அவன் விரும்பவில்லை. கண்ணனது மனைவி, பிள்ளைகளுக்குக் கூட அவன் பணத்தை செலவு செய்ய விரும்பவில்லை. சில காலங்களின் பின் ஒரு நாள் ……" என்பதைத் தொடர்ந்து ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

3. பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

ஒரு இனத்தின் சிறப்புக்கும் பெருமைக்கும் கட்டியம் கூறி நிற்பவை அதன் பண்டைய இருப்பை வெளிப்படுத்தும் சான்றுகளாகும். பழம்பெருமை பேசிக்கொண்டிருப்பதை விட அப்பெருமையைத் தக்க சான்றுகளுடன் அம்பலப்படுத்துவதே முக்கியமானது. தமிழ் மொழியிலே தமிழ்ப்பெருமை பறைசாற்றுகின்ற பழம்பெரும் பொக்கிசங்களாக பண்டைய இலக்கியங்கள், இலக்கண நூல்கள் திகழ்கின்றன. இவை எமது பண்டைய பண்பாடு, சமயம், வரலாறு மற்றும் விழுமியப் பண்புகளை அறிந்துகொள்ளவும் அவற்றைப் புரிந்து செயற்படவும் ஏற்ற வகையில் மிளிர்கின்றன. ஒரு சமுதாயம் எவ்வாறு வாழ வேண்டும்? எவ்வாறு வாழக்கூடாது? என்பவற்றை அறநெறியோடு எடுத்துரைப்பனவாகவும், தமிழரின் பண்டைய காதலையும் வீரத்தையும் தலைநிமிர்ந்து கூறுவனவாகவும், இரசனைமிக்க இயற்கைச் சொற்களால் எழில்படுத்தி இரசிக்கச் செய்வனவாகவும், வித்துவத்தின் மேன்மையை வெளிப்படுத்துவனவாகவும் இலக்கியங்களுக்கு வரம்பும் வரையறையும் வகுத்த இலக்கியங்களாகவும் இவற்றைக் காணலாம்.

எமது தாய்மொழியாம் தமிழ் மொழியின் பொக்கிசங்களாகவும் மொழிச் சிறப்புக்கு செம்மை தருவனவாகவும் திகழ்கின்ற நூல்களைக் கற்பதும், பேணிப் பாதுகாப்பதுவும் அவை கூறும் நற்பண்புகளுக்கு ஏற்ப நடப்பதுவும் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரதும் கடமை என்பதை மறந்துவிடலாகாது. மலையளவுள்ள எம் கலை, பண்பாட்டு விழுமியச் சொற்களில் தினையளவு திருடப்பட்டாலும் அதற்காகக் குரல் கொடுக்க வேண்டியதும் எமது கடமையே என்பதை நாம் நினைவிற்கொள்வோம்.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

டி.எஸ். எலியட் எனும் ஆங்கிலப் புலவர் "பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புக்கள்" என்னும் நூலில் பண்பாடு என்பது யாதென விரிவாக விளக்கினார். நம் இலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில்த்தான் ஆங்கிலமறிந்த தமிழறிஞர்களால் உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இன்று நாம் பண்பாடு என்னும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சாண்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனார். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது. கலித்தொகையில் "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்றும் வள்ளுவத்தில் "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்றும் வருவதைக் காண்க. பண்பாடு உடையவரைச் சான்றோர் என்றும் ஒழுக்கமுடையோர் என்றும் ஒளியோரென்றும் மாசற்ற காட்சி உடையோர் என்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் Culture எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல், நிலத்தைப் பண்படுத்துதல் என்னும் பொருள்தரும் இலத்தீன் சொல்லாகிய Cultura Agri என்பதிலிருந்து எவ்வாறு பிறந்ததோ அது போல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். உழவுத் தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.

(அ) டி.எஸ். எலியட் பண்பாடு பற்றிய தமது விளக்கத்தை முன்வைக்கும் நூலின் பெயர் யாது?

(ஆ) பண்பாடு என்னும் சொல் தரும் பொருளுக்கு நிகராகப் பழங்காலத்தில் தமிழில் வழங்கிய சொற்கள் யாவை?

(இ) பண்பாடு உடையோர் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டனர்?

(ஈ) வள்ளுவம் எனச் சுட்டப்பட்டுள்ள இலக்கியம் யாது?

(உ) Cultura Agri என்ற இலத்தீன் மொழிச் சொல் உணர்த்தும் பொருள் யாது?

(10 புள்ளிகள்)

5. செம்பருத்திக் கிராம சனசமூக நிலையத்தால் வாசிப்பு மாதத்தையொட்டி வாசகர் வட்டம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும், வாசகர்களுக்கு விளிப்புணர்வூட்டும் செயற்பாடும் மேற்கொள்ளப்-படவுள்ளதால் நிலையத்தின் செயலாளரான செ.செந்தாளன் என உம்மைக் கருதிக்கொண்டு வாசகர்களுக்கு விளிப்புணர்வூட்டும் வகையில் **100** சொற்களில் அமையுமாறு ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

**அல்லது**

செம்பருத்திக் கிராமத்தின் கழிவகற்றற் செயற்பாடு என்பது மிகவும் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள். எனவே உரிய முறையில் குப்பை கூளங்களையகற்றும் செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டி தாமரைத்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் ம.மல்லிகையான் அவர்களுக்கு **100** சொற்களில் அமையுமாறு ஒரு **கடிதம்** வரைக.

(15 புள்ளிகள்)

***

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

## கல்வி அமைச்சு

| 22 | T | III |
| --- | --- | --- |

### தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

### க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**தமிழ் மொழியும் இலக்கியமும் - III** | **நேரம் : 2 மணித்தியாலம்**

### தமிழ் மொழியும் இலக்கியமும் - III

**அறிவுறுத்தல்கள் :**

* அறிவுறுத்தல்களுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

1. சுருக்கமான விடை தருக.

(i) கொங்கர்க்கமராபதியளித்த
கோவே யிராச குலதிலகா

(அ) இதிற்குறிப்பிடப்படும் மன்னன்

(ஆ) அம்மன்னனின் வீரம் காட்டப்படும் விதம்

(ii) "கைராசிக்காரி நீங்கள்தான் மாமி என்ர தலப் புள்ளய ஏந்தணும்"

(அ) இங்கு கைராசிக்காரியாகக் குறிப்பிடப்பட்டவர்

(ஆ) தலைப்பிள்ளை என்பதன் கருத்து.

(iii) "கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினையிடிப்போம்"

(அ) இவ்வாறு செயற்படுபவர்கள் யார்?

(ஆ) இங்கு குறிப்பிடப்படும் உணவுகள் இரண்டைக் குறிப்படுக.

(iv) வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

(அ) இங்கு உத்தமனார் எனக் குறிப்பிடப்படுவர்.

(ஆ) இத்தொடர்களில் காணப்படும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

(v) "சினந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே"

(அ) இதில் குறிப்பிடப்படும் சமூக நம்பிக்கைகள்

(ஆ) முனைப்போடு வேலை செய்கிறார்கள் என்பதை எவ்வாறு அறியமுடிகிறது?

(vi) "அளிதோதானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண்டுன்றி நடுக்குற்று"

(அ) முதுமையின் அடையாளமாகக் குறிப்பிடப்பட்டவை

(ஆ) அளிதோதானே என்பதன் கருத்தினை எழுதுக.

(vii) முப்பத்தாறு பக்கத்தையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டு ஒன்றுந்தெரியாத அப்பாவி போல என்னைப் பார்த்தது.

(அ) இவ்வாறு பார்த்தது எது?

(ஆ) முப்பத்தாறு பக்கத்தைக் கொண்டதாக அமைந்த சிறுகதை எது?

(viii) "எட்டுணையானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற லினிது"

(அ) இதில் செய்யத்தக்கது யாது?

(ஆ) செய்யத்தகாதது யாது ? எனக் கூறப்பட்டவற்றை எழுதுக.

(ix) "அந்த வஸ்த்திரமும் அதுவரை துடிதுடித்துக் கொண்டிருக்கும் பாடஞ்சொன்ன பிறகு பழையபடி அந்த வலியை எடுத்து வயிற்றில் விட்டுவிடுவார்"

(அ) இவ்வாறு செய்பவர் யார் ?

(ஆ) வஸ்த்திரம் என்பது எதனைக் குறிக்கிறது?

(x) "மானமே புரப்பத் தவனிமே எலவர்க்கும்
வரிசையுந் தேற்றமும் மரபும்"

(அ) இக்கூற்றிற்குரியவர் யார்?

(ஆ) தேற்றம் என்பதனால் கருதப்படுவது.

(02 x 10 = 20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

(i) தென்றலிலே அசைந்தாடும் செந்நெல் வயற்கதிர்கள்
தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை
குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலிற் தவழ்ந்து
முத்துதிர நகைசெய்யும் சொத்தாகும் மழலை
கன்றினது உடல்நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்
கரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்

(அ) இப்பாடலில் உழவனின் சிறப்பு வெளிப்படுத்தப்பட்ட விதம்

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள உவமை, உருவக அணிகளுக்கு ஒவ்வொரு உதாரணந்தருக.

(ii) உரிமையுடன் தம்பியர் அன்று உணர்வறியாமையின்
அவைக்கண் உரைத்த மாற்றம்
பரிபவமோ கேட்டார்க்குப் பரிபவம் என்பது
பிறரால் பட்டா லன்றோ
கருதில் இது மற்று எவர்க்கும் ஒவ்வாதோ
கண்மலரில் கை படாதோ
பொரு தொழிலும் கடைநிலத்திற் கிடந்ததே
என மொழிந்தான் புகழே பூண்பான்.

(அ) அவமானம் பற்றிய தருமனின் கருத்து யாது?

(ஆ) போர்த்தொழில் மேற்கொள்ளும் உபாயம் பற்றிக் கூறப்பட்டிருப்பது யாது?

(iii) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங் கொண்டதுமா ளிகை

(அ) மனநிறைவுபற்றிக் கூறப்பட்டவற்றை எழுதுக.

(ஆ) இப்பாடலில் இடம்பெறும் முதுமொழியைக் குறிப்பிட்டு அதற்கு நிகரான பிறிதொரு பழமொழியை எழுதுக.

(iv) காட்சிப் படிமங்களை இணைப்பதற்குப் பலமுறைகள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் தனியான ஓர் அர்த்தமுண்டு. கண்ணிமைப்பதுபோல் காட்சி மாறுவது கட் (cut). இது ஒரு இணைப்புத்தான். ஒரு காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையிற் தோன்றுவது மயங்கித் தெளிதல் (Dissolve). திரை இருண்டு பின் மறுகாட்சி வருவது இருண்டு தெளிதல் (Fade in and fadeout). சினிமா மொழியின் காற்புள்ளி, முற்றுப்புள்ளி, பத்தி என இவற்றைச் சொல்லலாம்.

(அ) சினிமா மொழியின் காற்புள்ளி, முற்றுப்புள்ளி, பத்தி எனப்படுவனவற்றைக் குறிப்பிடுக.

(ஆ) சினிமா மொழிகளை எழுதுக.

(v) பண்டைக்காலம் தொடங்கி தமிழ்மக்கள் மேற்றிசை நாடுகளோடும் கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வடபாகத்தோடும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் தமிழ்நாட்டின் பட்டையும், மிளகையும், முத்தையும், இன்னும் பல பொருள்களையும் உலகம் விரும்பியுள்ளது. தமிழ் நாட்டின் புவியியல் அமைப்பு அதனைப் பண்டமாற்றத்திற்கு ஏற்ற இடமாக அமைத்துள்ளது.

(அ) பண்டைத் தமிழ்மக்கள் யாருடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர்?

(ஆ) உலகமக்கள் தமிழ்நாட்டின் எப்பொருட்களை விரும்பினார்கள்?

(04 x 05 = 20 புள்ளிகள்)

3. **குகப்படலத்தில்** பின்வருவோர் பற்றிய பரதனின் மனநிலை.

(அ) கோசலை

(ஆ) கைகேயி

**அல்லது**

**பேதைமையில்**

(அ) பேதையர்களின் செயல்கள்

(ஆ) உவமையணிக் கையாள்கை

(15 புள்ளிகள்)

4. **அற்றைத்திங்கள்** என்ற நாடகத்தில்.

(அ) பறம்பு மலையைப் பிரிவதால் பாரிமகளிரும், கபிலரும் அடைந்த துயரம்

(ஆ) போருக்கு முன்னரும் பின்னரும் பறம்பு தேசம் இருந்த நிலையைத் தாலாட்டுப் பாடலடிகள் எடுத்துரைக்குமாறு

**அல்லது**

**தத்தைவிடுதூதில்**

(அ) பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்துவைக்கும் பெற்றோர்களுக்கான படிப்பினைகள்

(ஆ) எத்தகைய தகைமைகளை முன்னிறுத்தித் தனது காதலை ஏற்குமாறு தலைவியிடம் கிளியைத் தூதுவிடுகிறான் தலைவன்

(15 புள்ளிகள்)

- **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதேனும் **ஓர்** வினாவுக்கு மட்டும் விடை எழுதுக.

5. **சிறியோடாத வருங்கால மனித நதி** என்ற கவிதையில்

(அ) எழுத்தறிவற்ற இளைஞனின் தோற்றப்பொலிவு

(ஆ) எழுத்தறிவில்லா இளைஞன் மீது கவிஞர் கொண்ட இரக்கம்

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

6. **நாட்டார் பாடல்களில்**

(அ) உழவனின் சமூக நல நாட்டம்.

(ஆ) அரிவி வெட்டும் இளைஞர்கள் பற்றிய வர்ணனை

(10 புள்ளிகள்)

7. **தனிப்பாடல்களை** ஆதாரமாகக்கொண்டு

(அ) காளமேகப் புலவரின் பாடலிலுள்ள சிலேடைத்தொடரும் அவற்றின் பொருள்களும்

(ஆ) புகழேந்திப் புலவரது பாடலில் சோழநாட்டின் வளமும், தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரும்

(10 புள்ளிகள்)

***